**வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்திட்டம் II மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்திட்டம் II சுழற்சி நிதியம் - 2013**

வறுமை ஒழிப்பு நுண்பாக நித செயற்திட்டம் II மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்திட்டம் II சுழற்சி நிதியம் என்பவற்றின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றம் ஏனைய விளக்கத்தகவல்களின் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி (ஜேபீஐசி) மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 யூலை 29 ஆம் திகதிய எஸ்எல் - பீ94 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்திட்டம் II இன் கடன் உடன்படிக்கையின் படி, இலங்கை மத்திய வங்கி செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. ஏழைகளின் வருமான மட்டத்தை அதிகரித்தல் மற்றும் வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளிற்கான கடன் வழங்குவதன் மூலம் அவர்களிற்கான முறையான நிதிச் சேவைகள் உட்பட விரிவாக்கல் மற்றும் நிதி நிறுவனங்களின் (பீஎவ்ஐஎஸ்) முகாமைத்துவம் மற்றும் பயிற்சி இயலளவை முன்னேற்றுதல் மற்றும் நலனாளிகளின் திறன் அபிவிருத்தி அதன் மூலம் வறுமை ஒழிப்பிற்கு உதவுதல், பிராந்திய சமமின்மையை இணங்க செய்தல் மற்றும் சமாதானத்தைக் கட்டி எழுப்புவதற்கு ஆதரவளித்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின்படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஜப்பான் யென் 2,759 மில்லியனாக இருந்ததுடன் அதில் ஜப்பான் யென் 2,575 மில்லியன் ஜேபீஐசீ ஆல் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 372 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் ஈடுசெய்யும் நிதிகளாக வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. வெளிநாட்டு வளங்கள் பணிப்பாளர் நாயகத்தினூடாக 2013 இல் செயற்திட்டப் பணிப்பாளர் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின்படி ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பிற்கான முகவர், கடன் உடன்படிக்கையின் I ஆம் பட்டோலையின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவுடன் இணங்கியதாக நிதிகளை மீள் ஒதுக்கீடு செய்வதற்கான ஒத்திசைவைக் கொடுத்திருந்தார்.

செயற்திட்டம் 2009 சனவரியில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன் கடன் உடன்படிக்கையின் 1 ஆம் பட்டோலையின் 3 ஆம் பிரிவிற் கிணங்க 2013 திசெம்பர் அளவில் பூரணப்படுத்தப்பட வேண்டுமெனப்பட்டியலிடப்பட்டது. எனினும் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2015 நவம்பர் 12 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது

கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஆ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டு இருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) விசேட யென் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதற்கான மீள்நிரப்பல்கள் அதிலிருந்தான பற்றுதல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையிருந்தமை நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அந்தத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்குப் பதிவேடுகளுடன், திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிராயம்

வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்திட்டம் II மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்திட்டம் II சுழற்சி நிதியம் என்பவற்றின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைய நிதிக்கூற்றுக்கள் நியாயமாகவும் உண்மையாகவும் தருகின்றன,

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் விசேட யென் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றுமமமு் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையானதாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக்கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்தச் செயற்திட்ட செலவினமான ரூபா 261,487,585 தொகையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 732,089,815 தொகையான செலவினத்துடன் ஒப்பிடலாம். மீளாய்வாண்டு, முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே காட்டப்படுகின்றது.

| விபரம் | ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| பங்குபற்றும் நிதி நிறுவனங்களிற்கான கடன் - மீள் நிதியளிப்பு | 201,521,500 | 651,357,800 | 2,880,070,300 |
| உபகரணங்கள் | - | 13,831,039 | 13,831,039 |
| வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் | 18,740,103 | 18,914,439 | 58,585,531 |
| நிருவாக செலவுகள் | 41,225,982 | 47,986,537 | 157,051,627 |
| மொத்தம் | 261,487,585 | 732,089,815 | 3,109,538,496 |

கடன் உடன்படிக்கையின் 1 ஆம் பட்டோலையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், 2008 – 2013 காலப்பகுதிக்கான செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு ஜப்பான் யென் 2,572 மில்லியன் தொகையாகும். எனினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த பண அதிகரிப்புக்கள் மொத்த ஒதுக்கீட்டில் 84 சதவீதமான யப்பான் யென் 2,149 மில்லியன் தொகையாகும். மேற்படி ஒதுக்கீட்டில் ஜப்பான் யென் 2,100 மில்லியன் கடனிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உண்மையாக பயன்படுத்திய தொகை ஜப்பான் யென் 2,099 மில்லியனாகும். அது 99.95 சதவீதத்தைப் பிரதிநித்துவப்படுத்துகின்றது. உசாத்துணைச் சேவைகள் மற்றும் இயலளவு அபிவிருத்தி ஆக்கக்கூறின் கீழ் செய்யப்பட்ட செலவுகள் (ஜப்பான்யென் 30.8 மில்லியன்) ஜப்பான சர்வதேச ஒத்துழைப்புக்கான முகவரினால் 2014 இல் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

எனவே, உசாத்துணைச் சேகைள் மற்றும் இயலளவு அபிவிருத்தி ஆக்கக்கூறின் பயன்படுத்தப்படாத கடனிலிருந்து ஜப்பான் யென் 205 மில்லின் ஒதுக்கீடு செய்வதன் மூலம் 2014 சனவரியில் மீள் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 4.2 விசேட யென் கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டில் இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட விசேட யென் கணக்குத் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் பொழிப்பு பின்வரும் கூற்றில் காட்டப்படுகின்றது.

| | ஜப்பான் யென் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |
| கூட்டு :- மீள்நிரப்பல்கள் | 96,838,244 | 126,275,956 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் / (நட்டம்) | - | (2,789,303) |
| | 96,838,244 | 123,486,653 |
| கழி :- பற்றுதல்கள் | 69,306,668 | 89,185,062 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 27,531,576 | 34,301,591 |

### 4.3 சுழற்சி நிதிய கணக்கு

கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(1) பிரிவின் படி 2011 ஒகஸ்த்து மாதத்தில் இலங்கை மத்திய வங்கியில் சுழற்சி நிதியக் கணக்கொன்று திறக்கப்பட்டது. மீள் நிதியிடல் பணஅளிப்புக்கள் இந்தக் கணக்கிலிருந்து 2013 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 956 மில்லியன் தொகையான மீள் நிதியிடல் கடன்கள் வழங்கப்பட்டன.

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இனங்காமை

செயற்திட்டததின் தொழிற்பாட்டுப் பணிப்புரைகளின் படி, செயற்திட்ட அமுலாக்கல் தொடர்பான கொள்கை விடயங்களை தீர்மானிப்பதற்கும் கருத்திற்கொள்ளவதற்குமாக செயற்திட்ட ஒழுங்குபடுத்தும் குழு இலங்கை மத்திய வங்கியில் மூன்றுமாதங்களிற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டும். எனினும் 2013 ஆம் ஆண்டின் போது செயற்திட்ட ஒழுங்குபடுத்தும் குழுக் கூட்டம் ஒன்றுமட்டுமே நடைபெற்றிருந்தது.

### 5.2 செயற்திட்டத்தின் சுழற்சி நிதியம்

செயற்திட்டத்தின் மீள்நிதியளிப்பு அறவீடுகள் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகி இருந்தபோதிலும், வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்திட்டம் II இன் சுழற்சி நிதிய கடன் திட்டம் 2018 யூலை 14 வரையான ஐந்தாண்டு காலத்திற்காக 2013 ஆம் ஆண்டிலேயே தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது.